**தலைப்பு 8 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூன் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக் குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்

கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக் குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 14 செலவு விடயங்களில் மொத்தத் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்பு 13 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சை பெற்றிருந்தது. | 2020 ஒக்தோபர் மாதம் அங்கீகரிக்கப்பட்டிருந்த 20 ஆவது அரசியலமைப்பின் திருத்தத்தின் காரணமாக அதிகாரங்கள் குறைக்கப்பட்டமையால் பதவியணியினர் குறைவடைதல் மதிப்பீடு தயாரிக்கும் போது கவனத்தில் எடுக்கும் இயலுமை காணப்படவில்லை. | ஏற்பாடுகள் உச்ச மட்ட வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் படி 47 ஆவது உறுப்புரையின் 155 ஊ இன் கீழ் ஆணைக் குழுவினால் மக்கள் அங்கத்தவர்களிடம் அல்லது | தேசிய பொலிஸ் ஆணைக் குழுச் சட்டம் தயாரிப்பதற்காக அமைச்சரவையின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை | அரசியலிமைப்பினால் சாட்டப்பட்டிருந்த அதிகாரங்கள் செயற்படுத்தப்பட வேண்டிருந்தது. |

ஏதேனும் அதிருப்தியடையாத நபர் ஒருவரினால் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்காக மற்றும் விசாரணைகள் மேற்கொள்வதற்காக செயற்படு முறையொன்று நிறுவுவதற்காக விதிகள் தயாரிக்கப்பட வேண்டும். தேசிய பொலிஸ் ஆணைக்குழுச் சட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர் விதிகள் தயாரிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் மாதம் வரை சட்டத்தை தயாரிக்கும் அலுவல்கள் ஆரம்ப நிலையிலே காணப்பட்டது.

எடுக்கப்பட்டு வருவதுடன், சட்டத்தை அங்கீகரித்த பின்னர் பொது மக்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக செயற்படு முறைமை சார் விதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இலக்கம் 2047/22 மற்றும் 2017.11.28 திகதிய அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த செயற்படு முறைமை சார் விதிகள் தற்போதைய ஆணைக் குழுவினால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப் பெறாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு விசாரணைகளை பூர்த்தி செய்வதன் முன்னேற்றம் முறையே 72 சதவீதம் மற்றும் 70 சதவீதம் மட்டத்தில் காணப்பட்டது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு விசாரணைகளை பூர்த்தி செய்தலின் முன்னேற்றம் நூற்றிற்கு 14 அளவான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2021 மார்ச் மாதத்தில் அது வரை மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த விசாரணை செய்முறைகள் திருத்தப்பட்டன. மாகாண அலுவலகங்களின் விசாரணைகளை பூர்த்தி செய்வதற்காக கிடைக்கப் பெறும் கோவைகள் அனைத்தும் தலைவரினால் பரீட்சீக்கப்பட்டு தேவையான அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் பெறப்படுகின்றமையால் கூடிய காலம் ஒன்று எடுக்கின்றது. | பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்தல் உச்சமட்டத்தில் ஆக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. |
| (ஆ) | மத்திய, ஊவா, சபரகமுவ, வடக்கு மற்றும் மேல் மாகாண அலுவலகங்களின் பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்தலின் முன்னேற்றம் 2021 செப்தெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 10 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2021.07.09 மற்றும் 2021.10.31 ஆகிய திகதிகளில் ஒப்பந்த சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருந்த மாகாண பணிப்பாளருக்கு பதிலாக புதிய பணிப்பாளர் 2021.11.01 திகதி நியமனம் செய்யப்பட்டதுடன் அக் காலப் பகுதியில் செல்வாக்கு ஒன்றிற்கு ஆளாகியிருந்தது. 2022.03.31 திகதி அளவில் 8 சதவீதம் முதல் 15 சதவீதம் வரையான முன்னேற்றம் ஒன்றே காணப்பட்டது. | மாகாண அலுவலகங்களில் பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்தல் உச்சமட்டத்தை ஆக்கிக் கொள்ள வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஆணைக் குழுவிற்காக உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு இருக்காமையால் மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரை இணைக்கும் படி நியமன அதிகாரியை கோரியுள்ள போதிலும் உத்தியோகத்தர் ஒருவர் வழங்காமையால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறுவுவதற்கு முடியால் உள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மேல் மாகாணம் தவிர ஏனைய 08 மாகாணங்களில் 18 உத்தியோகத்தர்கள் மாத்திரம் கடமையாற்றுவதுடன் மாகாண பணிப்பாளர்கள் (ஒப்பந்த அடிப்படை) 08 பேருக்கு மேலதிகமாக 05 விசாரணை உத்தியோகத்தர்கள், 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அரச முகாமைத்துவ சேவை உதவி உத்தியோத்தர் ஒருவர் காணப்பட்டனர். மாகாண அலுவலகங்களுக்கு கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக அனுபவம் உடைய விசாரணை குழு ஒன்று அந்த அலுவலகங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை. | மாகாண அலுவலகங்களின் பதவியணியினரை அதிகரிப்பதற்காக ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர் இணைக்கப்பட்டிருந்ததுடன், பல்பணி அபிவிருத்தி உதவியாளர் வீதம் உதவியாக இணைக்கும் படி முகாமைத்துவ சேவை திணைக்களத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மாகாண அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் நீண்டகால தேர்ச்சியுடனான நிரந்தர பயிற்சி பெற்றுள்ள உத்தியோகத்தராக காணப்படுவதுடன் அவர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் வழங்களும் வழங்கப்பட்டுள்ளது. | செயலாற்றலை அதிகரிப்பதற்காக போதியளவு எண்ணிக்கை பதவியணியினர் இணைத்தல். |